# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 62/மா/2023**
**நாள் : 29.04.2023**

திரு. சு. சுவாமிநாதன்
சென்னை – 600 099. – முறையீட்டு மனுதாரர்

செயற் பொறியாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, கொளத்தூர், அந்தோணி நகர், K.V.P. சுப்ரமணியம் பிளாட்ஸ், எண்.25 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. சுவாமிநாதன் என்பவரின் 03.03.2023 நாளிட்ட மனு 06.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 62/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, கொளத்தூர், அந்தோணி நகர், K.V.P. சுப்ரமணியம் பிளாட்ஸ், எண்.25 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. சுவாமிநாதன் தனது முறையீட்டு மனுவில்,

"நான் தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில் உதவி பிரிவு அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவன். என் தாயார் சுதந்தரபோராட்ட தியாகி தற்பொழுது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமான வீட்டு மனை T.S.No.30 பிளாக் எண்.3, மண்டலம் 6 முன்னாள் பகுதி 65, தற்பொழுது 64 கதவு எண்.37, 1வது தெரு, கணேஷ் நகர், கொளத்தூர், சென்னை – 600 099ல் உள்ளது.

2. மேற்கண்ட மனையினை உட்பிரிவு செய்ய மத்திய வட்டார அலுவலகம் புல்லாரெட்டி அவின்யூ, பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை 40க்கு 28.07.2015ல் ரூ.1180/- D.D.யுடன் விண்ணப்பித்தேன். அதனை தொடர்ந்து எனக்கு 01.09.2015ல் ஒரு I.P. கடிதம் கொடுக்கப்பட்டது. அது தொடர்பான விவரங்களுடன் 04.09.2015ல் பதில் பதிவு தபாலில் அனுப்பினேன். மீண்டும் விரைந்து உத்தரவு போட வேண்டி 09.10.2015ல் மேற்பார்வை பொறியாளருக்கு மனு கொடுத்துள்ளேன்.

3. வட்டார அலுவலக செயற்பொறியாளர் 23.10.2015 அன்று என்னுடைய மனுவை ஏற்றுக்கொள்ள மறுத்து என்னுடைய 04.09.2015 மற்றும் 09.10.2015 ஆகிய இரண்டு மனுக்களையும் பதிவு செய்யாமல், நான் I.P. கடிதத்திற்கு பதில் தரவில்லை எனக் கூறி

உண்மைக்கு புறம்பாக மனுவை நிராகரித்து விட்டார்கள். அதன் பின் 29.08.2016ல் என்னால் விண்ணப்பிக்கப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவில் நான் இரண்டு மனுக்கள் கொடுத்ததை உண்மை என பதிவு செய்துள்ளனர்.

4. மேற்கண்ட உத்தரவை எதிர்த்து அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அவர்களிடம் 25.10.2016 மற்றும் 05.01.2017ல் மேல் முறையீடு செய்தேன். அதனை தொடர்ந்து அரசு இணைச் செயலாளர் கடித நாள்:06.01.2017ன் அடிப்படையில் உறுப்பினர் செயலர் CMDA விரிவான விளக்கம் கேட்டு செயற்பொறியாளர் மண்டலம் 6, பெருநகர சென்னை மாநகராட்சி அயனாவரம் சென்னை – 600 023க்கு 02.03.2017ல் கடிதம் அனுப்பப்பட்டதன் அடிப்படையில் மண்டல அலுவலர் - 6 என்னுடைய மனு தொடர்பாக மாண்புமிகு உரிமையியல் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகள் அனைத்தையும் ஆய்வு செய்து அத்துடன் தள ஆய்விற்கு பின்பு விரிவான அறிக்கை தயார் செய்து 18.06.2018ல் சட்ட அலுவலர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பி, 29.06.2018ல் கருத்துரை பெற்று அதன் அடிப்படையில் 18.07.2018 அன்று உறுப்பினர் செயலர் CMDAவிற்கு அனுப்பிய கடிதத்தில், என்மனை உட்பிரிவு செய்ய அனைத்து தகுதியும் உண்டு என்று குறிப்பிட்டு மேல் நடவடிக்கைக்காக உத்தரவு கோரியுள்ளார்.

5. மேற்கண்ட மண்டலம்-6ன் அலுவலரின் ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் 10.11.2018ல் கூடுதல் செயலர் (தொழில்நுட்பம்) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை எனது மனை உட்பிரிவு மனுவை ஏற்றுக்கொள்ள ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உத்தரவிட்டதின் அடிப்படையில் 26.11.2018ல் நான் மீண்டும் ரூ.1180/-க்கு D.D.எடுத்து மீண்டும் சம்பந்தப்பட்ட என்னுடைய ஆவணங்கள் அனைத்தையும் இணைத்து மனையை உட்பிரிவு செய்ய வேண்டி 27.1.2018 அன்று விண்ணப்பித்தேன்.

6. மேற்கண்ட அரசு கடித நாள்: 10.11.2018ன் அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர், மண்டல அலுவலர்-6, என் மனையை உட்பிரிவு செய்யவும், கட்டிட அனுமதி பெறவும் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி மேற்பார்வை பொறியாளர் (பணிகள்) துறைக்கு 10.12.2018 அன்று கடிதம் அனுப்பியுள்ளனர் என்பதையும் தங்களது கனிவான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

7. என்னுடைய மனை உட்பிரிவு மனுவை 27.11.2018 அன்று பெற்று, 20.06.2019 வரை எந்த உத்தரவும் போடப்படாத காரணத்தால் அரசு முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அவர்களுக்கு மீண்டும் 22.07.2019ல் புகார் செய்தேன். அதன்பின்பு அரசு கூடுதல் செயலாளர் (தொழில் நுட்பம்) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை அவர்கள் என்னுடைய மனை உட்பிரிவு மனுவை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுத்து எனக்கும் அரசுக்கும் தகவல் அனுப்புமாறு பெருநகர சென்னை மநாகராட்சி ஆணையருக்கு 26.08.2019ல் கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

8. நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் 14.03.2019ல் ஆவணங்கள் கேட்டதை தொடர்ந்து மேற்பார்வை பொறியாளர்/மேல் முறையீட்டு அலுவலர், பணித்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, திரு. சக்தி மணிகண்டன் அவர்கள் 20.05.2019ல் 256 பக்கத்துக்கு ஆவணங்கள் அனுப்பியுள்ளார்கள் அதில் என்னுடைய மனை உட்பிரிவுக்கு அடிப்படையான ஆவணங்கள் மண்டல அலுவலர் ஆய்வு அறிக்கை நாள்:18.06.2018, சட்ட அலுவலர் கருத்து கடிதம் நாள்:29.06.2018, மாவட்ட அலுவலர் மற்றும் மண்டலம் 6ன் அலுவலர் கடிதம் 10.12.2018ல் மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பிய கடிதங்கள் அனைத்தையும் படித்து விட்டு, மறைத்து

வைத்துக்கொண்டு (Tamper of Records) 01.03.2019ல் திரு. ஞானசந்திரன், உதவி செயற்பொறியாளர், திரு. முருகன், செயற்பொறியாளர், திரு. சக்தி மணிகண்டன் மேற்பார்வை பொறியாளர் ஆகியோர் மீண்டும் புதிதாக சட்ட அலுவலரிடம் கருத்துரை கேட்டுள்ளனர் என்று விவரம் தெரியவந்தது. மேலும் முதுநிலை சட்ட அலுவலர் 06.03.2019ல் மேற்பார்வை பொறியாளர் பணித்துறைக்கு வழங்கிய கருத்துரையில் அரசு பரிந்துரை செய்ததின் அடிப்படையில் என் மனையை உட்பிரிவு செய்ய அறிவுறுத்தியுள்ளனர். மண்டலம்-6ன் அலுவலரும் மாண்புமிகு உரிமையியல் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளுக்கு எதிராக 29.03.2019ல் அறிக்கை கேட்டு மண்டல அலுவலருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அறிக்கை பெற்ற பின்பும் என்மனை உட்பிரிவு செய்வதற்கான உத்தரவு போடவில்லை என்பதை மிக்க பணிவுடன் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சக்தி ஞானசந்திரன், உதவி செயற்பொறியாளர் ஆகியோர் திட்டமிட்டு நானும் என் குடும்பத்தாரும் எங்களுக்கு பாத்தியமான சொத்தினை அனுபவிக்கவிடாமல் சட்டத்திற்கு புறம்பான செயலில் ஈடுபட்டுள்ளனர் என்பதை மேற்கண்ட ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

9. நான் மீண்டும் என்மனை உட்பிரிவு செய்வது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் 23.12.2021 மற்றும் 07.12.2022 ஆகிய தேதிகளில் மனு சமர்ப்பித்து அவர்களின் அறிவுறுத்தலின்படி திரு. சுத்தராராஜன், செயற்பொறியாளர், திரு. செந்தில் குமார், உதவி செயற்பொறியாளர் இருவருரிடம் நேரில் விசாரணைக்கு சென்று மண்டல அலுவலர் 18.06.2018, 18.07.2018 மற்றும் 10.12.2018 நாளிட்ட கடிதங்களிலிருந்தும் சட்ட அலுவலர் கருத்துரை நாட்கள் 29.6.2018 மற்றும் 06.03.2019 ஆகிய நாட்களில் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்புகளின் மூலம் சம்பந்தப்பட்ட அனைத்து சந்தேகங்கள் தீர்க்கப்பட்ட பின்பும் 07.03.2022ம் பட்டாவின் உண்மைத் தன்மை அறிய அயனாவரம் வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளதாக என்னிடம் கடித நகல் கொடுத்தனர். பட்டா உண்மையானது என்பது மேற்கண்ட ஆவணங்களும், அரசு கணிப்பொறியிலும் நிரூபித்துள்ள நிலையில் என்னை அலைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் சட்டத்திற்கு புறம்பாகவும் இயற்கை நியதிக்கு எதிராகவும் செயல்படுகின்றனர் என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

10. மேற்கண்ட கடிதத்தின் அடிப்படையில் அனைத்து விளக்கங்களுடன் 05.04.2022, 26.04.2022, 12.07.2022 மற்றும் 26.08.2022 ஆகிய தேதிகளில் பெருமதிப்பிற்குரிய முதன்மை செயலாளர், ஆணையர், பெருநகர சென்னை மநாகராட்சி அலுவலகத்தில் மனுக்களை நேரில் கொடுத்தும் அனைத்து சந்தேகங்கள் தீர்க்கப்பட்ட பின்பும் இன்றைய நாள்வரை என் மனை உட்பிரிவு தொடர்பாக எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்பதை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

11. சம்பந்தப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் 27.01.2018லிருந்து நான்கு ஆண்டுகளாக மிக அதிகளவு நபர்களுக்கு மனை உட்பிரிவு செய்யவும், கட்டிடம் கட்டும் உரிமை வழங்கியும் உத்தரவிட்டுள்ள நிலையில் திட்டமிட்டு நானும் என் குடும்பத்தாரும் எங்களுக்கு பத்தியமான சொத்தினை அனுபவிக்க விடாமல் சட்டத்திற்கு புறம்பான செயலில் ஈடுபட்டுள்ள சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் என் தாயார் சுதந்திர போராட்ட தியாகி, நானும் தலைமைச் செயலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவன். தற்போது எனக்கு வயது 71 ஆகின்றது. என் ஆயுள் காலத்திற்குள் இந்த பிரச்சனை தீர்க்கப்படாமல் இருக்குமேயானால், அலுவலக நடைமுறை எதுவும் தெரியாத என் பிள்ளைகள் எவ்வாறு இப்பிரச்சினையை தீர்க்கப்போகிறார்கள் என்பதையும் தங்கள் கருத்தில் கொண்டு இனியும் காலம் தாழ்த்தாமல் குறிப்பிட்ட

காலத்திற்குள் என் மனையை உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆவண செய்யுமாறு மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 23.03.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 15.3.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 23.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

"சென்னை, கொளத்தூர், கணேஷ் நகரில் பிளாக் எண்.3, மண்டலம்–6 முன்னாள் பகுதி–65 தற்போது 64 வீட்டுமனை T.S.No.30, கதவு எண்.37–ல் எனக்குச் சொந்தமான வீட்டு மனை உள்ளது. இம்மனையை உட்பிரிவு செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 6–ல் 04.09.2015 தேதியன்று மனு அளித்திருந்தேன். மேலும், மேற்கண்ட அலுவலகத்தால் கோரப்பட்டிருந்த விவரங்களை அவ்வலுவலகத்திற்கு 04.09.2015ல் அனுப்பியிருந்தேன். மேலும் எனது மனை சம்பந்தமான பட்டாவின் நகலையும் மேற்கண்ட அலுவலகத்தில் சமர்ப்பித்திருந்தேன். மேற்கண்ட எதனையும் ஏற்காமல் பதில் தரவில்லை எனக்கூறி எனது மனுவை மாநகராட்சியினர் நிராகரித்து விட்டார்கள்.

CMDA 02.03.2017 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–6ல் மண்டல அலுவலர் அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்து, மாநகராட்சி கடிதம் 18.07.2018ல் அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்ட மனையை உட்பிரிவு செய்ய அனைத்து தகுதியும் உண்டு என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதனையும் ஏற்க மறுத்து, தற்போது எனது மனைக்கான Genuiness Certificate அயனாவரம் வட்டாட்சியர் அலுவலத்தில் கோரப்பட்டுள்ளதாகவும், அவை கிடைக்கப்பெற்றவுடன் எனது மனையின் உட்பிரிவு சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்து என்னை அலைகழித்து வருகின்றனர்.

எனவே, மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள எனது மனையை உட்பிரிவு செய்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 2.3.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளும்படி தெரிவித்து இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி, உதவி செயற்பொறியாளர் 23.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

"சென்னை, கொளத்தூர், கணேஷ் நகரில் பிளாக் எண்.3, மண்டலம்–6 பகுதி–64 வீட்டுமனை T.S.No.30, கதவு எண்.37–ல் அமைந்துள்ள மனையை உட்பிரிவு செய்திட திரு. சுவாமிநாதன் என்பவர் மாநகராட்சியில் மனு அளித்திருந்தார். மேற்கண்ட மனு தொடர்பாக மாநகராட்சியால் ஆய்வு செய்யப்பட்டது. இது தொடர்பாக மேற்கண்ட இடம் விளையாட்டு திடல் (Play field) என பதிவுகளில் உள்ளதாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தெரிவித்துள்ளதையடுத்து மேற்கண்ட இடத்திற்கான உண்மைத் தன்மை குறித்து அயனாவரம் வட்டாட்சியரிடம் மார்ச்

2022–ல் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட வட்டாட்சியரிடமிருந்து இதுதொடர்பாக பதில் இன்னும் பெறப்படவில்லை. மேற்கண்ட பதில் பெறப்பட்டவுடன் மனுதாரரின் மனையை உட்பிரிவு செய்வது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

இது தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகத்தின் அறிக்கையை இன்னும் ஓரிரு நாளில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**இம்மனு தொடர்பாக அயனாவரம் வட்டாட்சியர் அவர்கள் 05.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு 27.3.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. அயனாவரம் வட்டாட்சியர் அவர்கள் 5.4.2023 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

சென்னை அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியராக கடந்த 2 மாதங்களாக பணியாற்றி வருகிறேன். அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள Permanent Land Registerல் (PLR) மனுதாரரின் பெயர் 30.10.2012ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்து அதன் நகலினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்.

மனுதாரர் திரு. சுவாமிநாதன் என்பவர் தனக்கு சொந்தமான இடத்தை உட்பிரிவு செய்வது தொடர்பாக மாநகராட்சியால் பெறப்பட்ட மனுவினைபொட்டி, மனுதாரரின் வீட்டிற்கான பட்டாவின் உண்மைத் தன்மை மற்றும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள திட்ட அனுமதி மனை உட்பிரிவு குறித்து கூட்டு கள ஆய்வு மேற்கொள்வது தொடர்பாக அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகத்தால் பெறப்பட்ட மாநகராட்சியின் கடிதத்தைத்யொட்டி, நாளை ( 6.4.2023 ) வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் நேரடி விசாரணையில் ஆஜராகி சம்பந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை அளிக்கும்படி மனுதாரரை கோரப்பட்டுள்ளது. நாளை நடைபெறும் விசாரணை மற்றும் மனுதாரர் அளிக்கும் ஆவணங்களின் அடிப்படையில் மாநகராட்சிக்கு பதில் அனுப்பப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அயனாவரம் வட்டாட்சியர் அவர்களின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் தனக்கு சொந்தமான சென்னை கொளத்தூர் கணேஷ் நகர், 12வது தெரு, கதவு எண்.37, பிளாக் எண்.3, T.S.30ல் உள்ள வீட்டு மனையை உப்பிரிவு செய்ய கோரி அளித்த மனுவிற்கு, பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து உட்பிரிவு செய்யாமல், வேண்டுமென்றே அலைகழிப்பதாகவும், எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், தனது மனையை உட்பிரிவு செய்வதற்கும் உத்தரவு வழங்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் பல மனுக்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அளித்தும், அதன் மீது உரிய தீர்வு காணாமல் பல காரணங்களை குறிப்பிட்டு மனுதாரரை அலைக்கழித்திருப்பது 'தெளிவாகிறது. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 6ன் மண்டல அலுவலர் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு முகவரியிட்ட 18.7.2018 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"The Tahsildar, Perambur Purasawalkkam Taluk has issued a patta for the above land in favour of Thiru. Swaminathan. Before issue of Patta to Thiru. Swaminathan, the Tahsildar has taken into consideration all the court judgements, the genuineness of layout for OSR in clarification with GCC and the Directorate of Town Country Planning and obtained legal opinion from the Government pleader. The request of Thiru. Swaminathan was under examination at various stages by this office. It has been found that the original children's play space earmarked in T.S.No.75,76,78 and 79 has been encroached by others. The Corporation road in T.S.No.31 and old panchayat road in T.S.No.69 have also been encroached by others thus preventing approach to 100 feet road. The legal cell of Greater Chennai Corporation has given its opinion that Thiru. S. Swaminathan is vested with the ownership and title of the property."

மேலும் சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.3430/91, 29/1/1999 நாளிட்டு தீர்ப்பில்:

"தாவா இடம் கணேஷ் நகரவாசிகளின் பொழுது போக்கிற்காக பொது பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடம் என்று வா.சா.ஆ.5ன்படி முடிவு செய்ய இயலாது என்றும், வா.சா.ஆ.5 வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

தாவா சொத்து பொது பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடம் என்று வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்படாததால் மேற்படி இடத்தினை இண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதியிடம் நான்காவது பிரதிவாதி ஒப்படைப்பதற்கும் மேற்படி இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை இரண்டாவது மற்றும் மூன்றாவது பிரதிவாதிகள் அகற்றுவதற்கும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகள் பெற இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்காணும் சூழ்நிலையில் வாதிகள் வழக்குரையில் கோரியுள்ளது போல் தாவா சொத்து பொது பூங்கா என்பதற்கு விளம்புகை பரிகாரமும், அதனைத் தொடர்ந்து மேற்படி இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் தாவா சொத்தினை 4ம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளிடம் ஒப்படைப்பதற்கும், 2வது மற்றும் 3வது பிரதிவாதிகள் தவா சொத்திலுள்ள பிரதிவாதிகளை அகற்றுவதற்கும், செயலுறுத்துக்கட்ளை பரிகாரமும் பெற உரிமை உடையவர்கள் அல்ல என்று கண்டு அவ்வாறே இவ்வெழுவினாவிற்கு இந்நீதிமன்றம் விடையளிக்கிறது."

மேலும், இந்நேர்வு தொடர்பாக சென்னை அயனாவரம் வட்டாட்சியர் 5/4/2023 அன்று இம்முறைமன்றத்தில் நேரில் ஆஜராகி அளித்த வாக்குமூலத்தில் Permanent Land Registerல் மனுதாரரின் பெயர் 30.10.2012ல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து அதற்கான PLRன் ஆவண நகலினை இம்முறைமன்றத்தில் அளித்துள்ளார்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், குறிப்பாக

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

எனவே, இந்நேர்வில், சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றம் அ.வ.எண்.3430/99ல் 29/1/1999 நாளிட்ட தீர்ப்பு (ம) இரண்டாவது மேல்முறையீடு (SA) எண். 1321/2004ல், 21/10/2010 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும், சென்னை அயனாவரம் வட்டாட்சியர் அளித்த Permanent land Registerன் (PLR) நகல் அடிப்படையிலும், மனுதாரரின்

கோரிக்கை மனு மீது உரிய சட்ட பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் எடுக்கப்பட நடவடிக்கையின் விவரம் குறித்து 15 தினங்களுக்குள் இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

The Greater Chennai Corporation cannot delay the matter further on Vague grounds endlessly now that the PLR has the name of the Petitioner even way back in 2012, eleven years ago. Hence, to avert any further suspicion the Greater Chennai Corporation should attend to the issue in a prompt manner.

2023–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. க. சுவாமிநாதன்,
KVP, சுப்பிரமணியம் பிளாட்,
எண்.25, அந்தோணி நகர்,
கொளத்தூர், சென்னை – 600 099.

2) கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

3) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) கண்காணிப்பு பொறியாளர்,
பணித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003.

5) செயற் பொறியாளர்,
பணித் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 003.

6) மாவட்ட ஆட்சியர்,
சென்னை.

7) வட்டாட்சியர்,
18/31, பள்ளி அரசன் தெரு,
ஆஸ்பரின் கார்டன் குமரன் நகர்,
கீழ்ப்பாக்கம், சென்னை – 600 010.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்.